# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.No.113/2013** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **பி.சா-03 ( DW- 03 )** |
| **பெயர்** | :- | **சுகவனேஷ்வரன் த/பெ.கந்தசாமி** |
| **தேதி** | :- | **21-04-2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

நான் 12-ஆம் வகுப்பு படித்துள்ளேன். முருங்கப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கதில் எழுத்தராக வேலை செய்கிறேன். இராஜேந்திரன் மேற்சொன்ன அதே சங்கத்தில் உர விற்பனையாளராக வேலை செய்கிறார். நான் வேலையில் சேர்வதற்கு முன்பாக இருந்தே அவர் அங்கு வேலை செய்தார். 2020-ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார்.

வழக்குச் சொத்துக்கள் இராஜேந்திரனுக்கு சொந்தமான சொத்துக்கள் என்றால் சரிதான். அவர் பெத்தாம்பட்டி ஊர் புல எண் 4/10-ல் அவருக்கு சொத்தமான 91 சென்ட் நிலத்தில் ஒருபகுதி 30 சென்ட் நிலத்தை பொறுத்து விற்பதற்காக குறிப்பிட்ட நான்கெல்லைகளுடன் எனக்கு பொது பகர அதிகாரப் பத்திரம் ஒன்றை 08.11.2012 ஆம் தேதியன்று எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். 05.02.2013 ஆம் தேதியன்று மேற்சொன்ன 30 சென்ட் நிலத்தை பொறுத்து இராஜேஷ்வரி என்பவருக்கு நான் பதிவுசெய்யப்பட்ட விற்பனைக்கான ஒப்பந்தத்தை எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். 29.02.2013-ஆம் தேதியன்று நான் மேற்சொன்ன 30 சென்ட் நிலத்தை பகர

அதிகார முகவர் என்ற தகுநிலையில் சின்னபாப்பா என்பவருக்கு கிரயப் பத்திரம் எழுதி பதிவுசெய்து கொடுத்தேன் என்றால் சரிதான். சின்னபாப்பா என்பவர் இராமலிங்கம், குப்புசாமி ஆகிய இருவருக்கும் அந்த 30 சென்ட் நிலத்தை பொறுத்து 15.03.2013-ஆம் தேதியன்று விற்று விற்பனை பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். நான் சின்னபாப்பாவிற்கு கிரயம் எழுதிக் கொடுத்த நாள்வரை இராஜேந்திரன் எனக்கு எழுதிக் கொடுத்த பகர அதிகாரப் பத்திரம் செயலில் இருந்தது என்றால் சரிதான்.

இராஜேந்திரன் அவரது மனைவிக்கு மேற்சொன்ன 30 சென்ட் நிலத்தை பொறுத்து பகர அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றும் அந்த பகர அதிகாரப் பத்திரத்தின்படி அவரது மனைவி வேறு ஒரு நபருடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார் என்றும் நான் முதல்விசாரணையில் சொல்லி யுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு ஒப்பந்தம் செய்துகொண்ட யாராவது ஏற்றதை ஆற்றுக நிவாரணத்திற்கு வழக்கிட்டுள்ளார்களா என்றால் இல்லை.

இராஜேந்திரன் சொத்தை விற்பதற்காகதான் எனக்கு பகர அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றும் அதன் அடிப்படையில் நான் சின்னபாப்பாவிற்கு சொத்தை கிரயம் கொடுத்தேன் என்றும் அந்த கிரயத்தின்பேரில் சின்னபாப்பா இராமலிங்கதிற்கும் குப்புசாமிக்கும் கிரயம் கொடுத்தார் என்றும் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் அதில் என்ன சொல்லப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது. நான் சொல்லிதான் எதிர்வழக்குரை தயாரிக்கப்பட்டது என்றும் வழக்குவிசாரணை தொடங்கிய பிறகு கூடுதல் வாதுரை தாக்கல்செய்து முந்தைய வாதுரைக்கு முற்றிலும் முரணாக கடனுக்காக மேற்சொன்ன ஆவணங்கள் ஏற்பட்டது என்று கூறி

அதை வலியுறுத்தி தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களின் உள்ளடக்கங்களுக்கு விரோதமாக நான் சொல்லும் சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

இராமலிங்கமும் குப்புசாமியும் உரிய மறுபயன் கொடுத்து நல்லெண்ணத்தில் கிரயம் வாங்கியவர்கள் என்றும் அவர்களுடைய கிரயம் செல்லும் என்றும் சொன்னால் சரியல்ல. இராஜேந்திரன் என்னுடன் ஒரே இடத்தில் பணிபுரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.